# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 808[illegible]71

1. District மாவட்டம் : சென்னை    PS: காவல்நிலையம்: நகர சிறப்பு பிரிவு-III    Year: ஆண்டு: 2023    FIR No.: மு.த.அ. எண்: 2    Date: நாள்: 09/05/2023

2. (i) Act சட்டம்: இதச    Sections பிரிவுகள்: 120(B), 409, 167, 468
(ii) Act சட்டம்: இதச    Sections பிரிவுகள்: 471, 477(A)
(iii) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 1988    Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) & d,
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் : இதச    r/w 109 IPC.

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல் : 22/6/2017    Date to : நாள் வரை : பணி நிறைவு செய்யப்பட்ட நாள் 2021 வரை.
Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல் : —    Time to : நேரம் வரை : —
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 31/03/2023    Time : நேரம் :
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 09/05/2023    Time : நேரம் : 14.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 73 Km, தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் : —    (b) Address : முகவரி : தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 2112 வீடுகள் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள், கீழ்கதிர்ப்பூர் கிராமம், காஞ்சிபுரம்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் : —    District : மாவட்டம் : —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : C. உமாதேவி    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : P.L. சந்திரசேகரன்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு :    (d) Nationality : நாட்டினம் : இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் :
Date of Issue : வழங்கப்பட்ட நாள் :    Place of Issue : வழங்கப்பட்ட இடம் :
(f) Occupation : தொழில் : காவல் ஆய்வாளர்    (g) Address : முகவரி : நகர சிறப்பு பிரிவு-III, ஆலந்தூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. திரு. T.P. தேவதாஸ், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், மேற்பார்வை பொறியாளர்(ஓய்வு) 2. திருமதி. மாலா மேற்பார்வை பொறியாளர் (நிர்வாக பொறியாளர் ஓய்வு) (3) திரு. K. ராஜி, தலைமை பொறியாளர் (ஓய்வு). (4) திரு. T. சந்திரசேகர் (செயற்பொறியாளர் ஓய்வு) உதவி நிர்வாக பொறியாளர், (5) திரு. திருப்பதி (உதவி செயற்பொறியாளர் ஓய்வு) உதவி நிர்வாக பொறியாளர் (6) திரு. B. சரண் தேசாய் BNR Infra Structure Projects Pvt Ltd. Rept by Directors. அண்ணாநகர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
முதல் நிலை விசாரணை

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனி தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed [illegible] Rank காவல் துணை கண்காணிப்பாளர் to take up the Investigation / Refused Investigation / transferred to PS சென்னை நகர் பிரிவு-5, on point of jurisdiction. உணவு கடத்தல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09/05/2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 09/05/2023
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் சி. உமாதேவி
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர், நகர சிறப்பு பிரிவு - III, உணவு கடத்தல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, [illegible] சென்னை-16.

Continuation of Column No.12 of FIR in V&AC Cr.No. 2 /AC/2023/CC-II Dated 09.05.2023

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

இன்று 09.05.2023 நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை நமூனா எண் PE 201/2018/TNSCB/CSU-III நாள் 31.03.2023 ன் படி கிடைக்கப்பெற்ற உத்திரவு மற்றும் கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் விழிப்பு ஆணையர் அவர்களின் உத்திரவு U.O.Note No.740/VC-1/2021-1 நாள் 26.03.2021 ன் படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகர பிரிவு-2 குற்ற எண்.2/AC/2023-CC-II பிரிவுகள் 120B, 409, 167, 468, 471, 477A இதச மற்றும் 13(2) உ/இ 13(1)(c) மற்றும் 13(1)(d) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 உ/இ 109 இதச வின்படி இன்று 09.05.2023 ம் தேதி 14.30 மணிக்கு இந்த வழக்கை பதிவு செய்கிறேன். வழக்கின் விவரம் பின்வருமாறு.

குற்றவாளிகளின் விவரம் : (Column No.7)

1) குற்ற அலுவலர்-1 திரு.T.P.தேவதாஸ், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் தலைமை அலுவலகம் சென்னை சரகம்-1 ல் மேற்பார்வை பொறியாளராக 21.11.2017 முதல் 31.07.2018 வரை பணியாற்றி பணி ஓய்வு பெற்றுள்ளார்.

2) குற்ற அலுவலர்-2 திருமதி.மாலா 24.02.2016 லிருந்து தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் காஞ்சிபுரம் கோட்டம், சிறப்பு கோட்டத்தில் நிர்வாக பொறியாளராக பணிபுரிந்து வந்தார். தற்போது 21.07.2022 முதல் Chennai East Circle-1 ல் மேற்பார்வை பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

3) குற்ற அலுவலர்-3 திரு.K.ராஜூ 14.06.2017 முதல் சென்னை தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தில் தலைமை அலுவலகத்தில் தலைமை பொறியாளர் ஆக பணிபுரிந்து 31.05.2018 ல் பணி ஓய்வு பெற்றுள்ளார்.

4) குற்ற அலுவலர்-4 திரு.T.சுந்தரமூர்த்தி 14.01.2016 தமிழ்நாடு குடிசை மாற்று வாரிய RAY Cell பிரிவில் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து வந்தார். தற்போது சென்னை கோட்டம் -III ல் உதவி நிர்வாக பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

5) குற்ற அலுவலர்-5 திரு.P.திருப்பதி 18.04.2018 முதல் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் காஞ்சிபுரம் கோட்டத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வந்தார். தற்போது சென்னை கோட்டம் -VIII, கண்ணகி நகரில் உதவி நிர்வாக பொறியாளராக பணிபுரிந்து வருகிறார்.

6) குற்ற அலுவலர்கள் 1 முதல் 5 வரையிலான நபர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 பிரிவு 2(c) ன் படி பொது ஊழியர் என்ற வரையறைக்குட்பட்டவராவார்கள்.

7) குற்றம் சாட்டப்பட்ட திரு.B.சரண் பிரசாத் B.N.R. Infra Structure Projects Pvt Ltd., No.923, 17 வது மெயின்ரோடு, அண்ணா நகர், சென்னை (தனிநபர்) மற்றும் B.N.R. Infra Structure Projects Pvt நிறுவனம் Represented by its Directors. இவர்கள் குடிசை மாற்று வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் ஆவார்.

8) இவ்வழக்கில் குற்ற அலுவலர்களான AO-1 திரு.T.P.தேவதாஸ், மேற்பார்வை பொறியாளர் (ஓய்வு 31.07.2018) மற்றும் AO-3 திரு.K.ராஜு, முதன்மை பொறியாளர் (ஓய்வு 31.05.2018), TNSCB, சென்னை ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்வதற்கு அரசாணை எண்.1(D) No.25/SC2(2)/2019 Housing and Urban Development Department dated 22.07.2021 ன் படி அரசு முதன்மை செயலர் அவர்கள் பிரிவு 17(A) ஊழல் தடுப்பு சட்டம் 1988 as amended 2018 ன் படி முன் அனுமதி ஆணை வழங்கியுள்ளார்கள்.

9) இவ்வழக்கில் குற்ற அலுவலர்களான AO-2 திருமதி.மாலா செயற்பொறியாளர், காஞ்சிபுரம் கோட்டம், AO-4 திரு.கிருஷ்ணமூர்த்தி, உதவி செயற்பொறியாளர், கோட்டம்-II மற்றும் AO-5 திரு.T.திருப்பதி, உதவி செயற்பொறியாளர், காஞ்சிபுரம் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து புலன் விசாரணை மேற்கொள்வதற்கு கடித எண்.Rc.J1/11015/2019 Dated 03.01.2020 ன் படி நிர்வாக இயக்குனர், TNSCB, Chennai (தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்) அவர்கள் பிரிவு 17(A) ஊழல் தடுப்பு சட்டம் 1988 as amended 2018 ன் படி முன் அனுமதி ஆணை வழங்கியுள்ளார்கள்.

10) காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் நகராட்சி மத்தியில் ஓடும் வேகவதி ஆற்றில் 2015 டிசம்பர் மாதம் ஏற்பட்ட வெள்ளபெருக்கில் இருகரையோரத்தில் உள்ள ஆக்கிரமிப்பு செய்துள்ள பாதிக்கப்பட்ட மனைதாரர்களுக்காக 2112 குடியிருப்புகள் கட்ட காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களால், காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் தாலுகா, கீழ்கதிர்பூர் கிராமத்தில் சர்வே எண்.3/3A2 மற்றும் 237/3 பரப்பு 6.99 ஹெக்டேர் பரப்பளவில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்ட (2112-33 Block X 64 வீடுகள் G+3, 400.53 Sq.ft) நிலம் தேர்வு செய்யப்பட்டது.

11) மேற்படி திட்டத்தில் குற்ற அலுவலர்கள் ஒப்பந்தக்காரரை லாபம் அடைய செய்து, தரமற்ற கட்டுமானத்தில் ஈடுபடுவதாக லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குனர் அவர்களுக்கு 05.07.2018 மற்றும் 20.09.2018 ஆகிய தேதிகளில் திரு.N.ஜெகதீசன், தலைவர், பணி ஓய்வு பெற்றோர் நலச்சங்கம் அவர்கள் முகவரியிட்டு புகார் மனுக்கள் பெறப்பட்டுள்ளது. அவ்வாறே 03.07.2018 தேதி திரு.முருகன், செயலாளர், பணி ஓய்வு பெற்றோர் நலச்சங்கம் அவர்கள் முகவரியிட்டு புகார் மனு பெறப்பட்டுள்ளது. விசாரணையில் மேற்படி இருவரும் அப்புகார் மனுக்களை அனுப்பவில்லை என்று தெரிவித்துள்ளனர். இருப்பினும் மனுவினை விசாரணை செய்தபோது புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளுக்கு முகாந்திரம் இருப்பது தெரியவருகிறது.

12) குற்றச்சாட்டு-1 பற்றிய விசாரணை விவரம் : - (i) அடுக்குமாடி குடிமிருப்பு கட்டுமானத்தில் திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ள அடித்தளத்தின் உயரத்தை குறைத்து, அதில் மண் நிரப்பப்படாமல் மேற்படி மண் நிரப்பும் பணியில் ஒப்பந்ததாரர் லாபம் அடைவதற்கு உடந்தையாக குற்ற அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர். (ii) மின்சார வாரியத்திற்கு செலுத்தவேண்டிய மின் சேவை இணைப்பு கட்டணம் திட்ட மதிப்பீட்டில் ஒப்பந்ததாரர் பெற வேண்டும் என்று சேர்க்கப்பட்டுள்ளது. இதனை மீறி மேற்படி கட்டணத்தை குடிசை மாற்று வாரியம் மற்றும் பயனாளிகள் செலுத்தும் படி செய்துள்ளார்கள். இதன் மூலம் B.சரண் பிரசாத் என்பரையும் அவரது நிறுவனத்தையும் குற்ற அலுவலர்கள் வாரியம் பணத்தை கையாடல் செய்ததற்கு உடந்தையாக செயல்பட்டுள்ளனர். (iii) கட்டமைப்பு வடிவமைப்பு (Structural

design) ஒப்பந்ததாரரால் தயாரிக்கப்பட்டுள்ளது. மண்ணின் தன்மையை ஆய்வு செய்து கட்டமைப்பு வடிவமைப்புடன் IIT அல்லது அண்ணா பல்கலை கழகத்திற்கு அனுப்பி Type design க்கான ஒப்புதல் பெறவேண்டும். ஆனால் தனிப்பட்ட ஆலோசகர் மூலம் ஒப்பந்ததாரரால் Structural design வடிவமைக்கப்பட்டு அண்ணா பல்கலை கழக விரிவுரையாளர் ஒருவர் மூலம் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு வாரியத்திற்கு அனுப்பப்பட்ட கட்டமைப்பு வடிவமைப்பில் வாரியத்தின் Structural quality control (SQC) ஆய்வு செய்ததில் பல குறைபாடுகள் கண்டறியப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய பலமுறை SQC லிருந்து குற்ற அலுவலர்கள் 1 மற்றும் 2க்கு பல குறிப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. ஆனால் சொல்லப்பட்ட குறைபாடுகளை சரிசெய்யாமல் குற்ற அலுவலர் 3 ன் ஒப்புதலுடன் குற்ற அலுவலர் 2 மற்றும் 1க்கு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. ஒப்பந்ததாரர் லாபம் அடையும் நோக்குடன் குற்ற அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர். மேற்படி structural design, Chief Engineer அவர்களால் ஒப்புதல் அளிக்கப்படவேண்டும் ஆனால் இக்கட்டிடத்திற்கு Superintending Engineer AO-1 ஒப்புதல் அளித்துள்ளார். இதனால் தளத்தின் கட்டுமானத்தின் தரம் குறைந்துள்ளது. (iv) கடற்கரையிலிருந்து 100 கிலோ மீட்டர் தொலைவில் கட்டுமான பணி திட்டங்களுக்கு அண்ணா பல்கலை கழக்கத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ள தரக்கட்டுப்பாடு (IS code) ன் படி M30 grade concreate பயன்படுத்தப்படவேண்டும். மேற்படி கட்டுமானத்தளத்தில் தரம் வாய்ந்த M30 grade concreate க்கான விலை மதிப்பை கணக்கீடு செய்து பெற்றுக்கொண்டு குறைந்த தரம் உடைய M25 grade concreate ஐ ஒப்பந்ததாரர் பயன்படுத்தியுள்ளார். குற்ற அலுவலர்-1 ஒப்பந்ததாரருக்கு ஒப்புதல் அளித்து பணப்பயன் அடைய செய்துள்ளார். இதன் மூலம் அரசுக்கு மேற்படி குற்ற அலுவலர்கள் பண இழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள். அவ்வாறே Estimated and Tender plan ல் உள்ள plinth area 37.21 m.sq. ஆனால் கட்டிடம் கட்டப்பட்ட நிலையில் plinth area ன் அளவு 33.04 m.sq ஆக குறைக்கப்பட்டுள்ளது. ஆனால் Carpet area வை கணக்கிட்டு அனைத்து வீடுகளும் விலை மதிப்பு

கணக்கிடப்பட்டு, மதிப்பீடு செய்யப்பட்டு அரசுக்கு குற்ற அலுவலர்கள் பண இழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள்.

13) குற்றச்சாட்டு -2 :- குற்ற அலுவலர்-2, ஒப்பந்ததாரர் / குற்றவாளி-6 க்கு கட்டுமான திட்டத்தில் stage-2 ல் பணப்பட்டுவாடா செய்யும் போது 12% GST வரியுடன் சேர்த்து வழங்கியுள்ளார். ஆனால் ஏற்கனவே திட்ட மதிப்பீட்டிலேயே வரிகள் உட்படுத்தப்பட்டுள்ளதால் தனியாக GST கொடுக்கபடத்தேவையில்லை. அவ்வாறே உண்மையை மறைத்து ஒப்பந்ததாரருக்கு சாதகமாக இருவேறு திருத்திய நிதி அறிக்கைகளை குற்ற அலுவலர்-2 குற்ற அலுவலர்-5 ன் மூலம் தயாரித்து வாரியத்திற்கு ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளார். இதனால் ஒப்பந்ததாரருக்கு ரூ.1,29,49,536/- கொடுக்கப்பட்டு 6 மாதங்கள் அரசு பணம் தனி நபரிடம் பாதுகாப்பற்ற முறையில் இருந்து ஒப்பந்ததாரர் ஆதாயம் அடைந்துள்ளார். மேற்படி நடவடிக்கைகள் குற்ற அலுவலர்கள் 1,2,5 ஆகியோர் ஒப்பந்ததாரர், குற்றவாளி 6 ஐ லாபம் அடைய செய்யும் நோக்குடன் குற்றமுரு நடத்தையுடன் செயல்பட்டுள்ளார்கள்.

14) குற்றச்சாட்டு-3:- வாரியத்தால் ஒப்புதல் பெறப்பட்ட திட்ட மதிப்பீடு ரூ.168,90,34,500/- ஆகும். ஒப்பந்ததாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்த புள்ளி ரூ.182,44,47,631/- மேற்படி கட்டுமானத்திற்கு விலை அனுசரிப்பு பிரிவு வழங்கப்படுவது இல்லை. ஆனால் ஒப்பந்ததரரரை லாபம் அடைய செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் விலை ஏற்றம் இருக்கும் என்று தானாக அனுமானித்து குற்ற அலுவலர் -4 ஒப்பந்த புள்ளி மதிப்பீட்டுடன் ரூ. 5,61,13,273/- ஐ கூட்டி ரூ.174,51,47,773 என்று கணக்கிட்டு ஒப்பந்ததாரர் கோரிய தொகையான ரூ.182,44,47,631/- உடன் ஒப்பிட்டு அதிக விழுகாட்டை குறைத்துக்காட்டி குற்ற அலுவலர் 3 மற்றும் குற்ற அலுவலர் 2 ஆகியோரால் விலைபுள்ளி ஒப்புதல் அளித்து ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஒப்பந்தாரரை முறையற்ற முறையில் லாபம் அடைய செய்யும் நோக்குடன் வாரியத்திற்கும், அரசுக்கும் நிதி இழப்பு ஏற்படும் வகையில் குற்ற அலுவலர்கள் செயல்பட்டுள்ளனர்.

15) முதல் நிலை விசாரணையின் போது பெறப்பட்ட தகவல்களை தவிர்த்து சில சட்டத்திற்கு முரணான விதி மீறல்கள் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது. ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.168,90,34,500/- இத்தொகையில் சிவில் வேலைகள் அனைத்தும் சேர்த்து ஒதுக்கப்பட்ட தொகையானது ரூ.147,51,39,331/- இவை தவிர தொழிலாளர் நல நிதி 1%, Supervision Charges at 12.5% மற்றும் இதர செலவினங்களுக்காக 1% மும் ஒதுக்கப்பட்டு கணக்கிடப்பட்ட தொகை ரூ.21,38,95,169/ இந்த தொகையானது வாரியத்திற்கு சேரவேண்டிய தொகை ஆகும். ஆனால் இதனையும் சேர்த்து கணக்கிட்டு ஒப்புதல் பெறப்பட்ட மதிப்பீட்டு தொகையாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய விதியை மீறிய செயலாகும். இதற்கு வாரியம் Superintending Engineer மற்றும் Chief Engineer ஆகியோர் பொறுப்பாவார்கள். பொதுவாக சிவில் வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட தொகை மட்டுமே ஒப்பந்தபுள்ளி கோரப்படவேண்டும். ஆனால் இவ்வழக்கில் சிவில் வேலைகளுக்காக ஒதுக்கப்பட்ட தொகை ரூ.147,51,39,331/- மற்றும் வாரியத்திற்க்கான தொகை ரூ.12,75,43,989/- வுடன் சேர்த்து கணக்கிட்டு ஒப்பந்தபுள்ளி ரூ.160,26,83,320/-, தொகையாக கோரப்பட்டுள்ளது. மேலும் ஒரிஜினல் அக்ரிமெண்ட் தொகையாக ரூ.179,69,05,781/- ஆக கணக்கிடப்பட்டு ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கும் வாரியத்திற்கும் ரூ.32,17,66,450/- இழப்பீடு ஏற்பட்டுள்ளது. இதற்கு TNSCB Board, Superintending Engineer மற்றும் Chief Engineer ஆகியோர் பொறுப்பாவார்கள்.

16) மேலும் இவ்வழக்கு விசாரணையில் இருந்தபோதே குடிசை மாற்று வாரியத்தால் ஒரு குழு அமைக்கப்பட்டு, அது CUBE, IIT நிறுவனத்தின் கருத்துரையை நாடியுள்ளது. மேற்படி CUBE நிறுவனம், குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்பட்ட வீடுகளை உறுதி படுத்துவதற்காக இரண்டு வகையான பலப்படுத்தும் வழிகளை கருத்துரையாக வழங்கியது. மேற்படி கருத்துரையில் அடுக்குமாடி குடியிருப்பு கட்டப்பட்டுள்ள பூமியை உறுதிபடுத்தும் Geo Technical முறையை மட்டும் செயல்படுத்திவிட்டு, side coloum மற்றும் Pillar வைத்து உறுதிபடுத்தும் முறையை (External Structural Retrofit system) நேரம், உழைப்பு

மற்றும் நிதியை கணக்கிட்டு செயல்படுத்தப்படவில்லை. இதனால் கான்கிரிட்டால் கட்டப்பட்ட மேற்படி குடிசை மாற்று வாரிய அடுக்குமாடி குடியிருப்புகளில் தற்போது சுவர்களிலும், தளத்திலும் பல இடங்களில் விரிசல்கள் ஏற்பட்டு உள்ளது. மாடி வீட்டில் உள்ள தரை தளத்தில் தண்ணீர் ஊற்றினால் அது கீழ் வீட்டின் மேற்கூரையில் இருந்து ஒழுகுகிறது. அவ்வாறே சுவற்றின் ஒரு பக்கதில் ஏற்பட்டுள்ள விரிசலானது தொடர்ச்சியாக அதன் மறுபக்கதிலும் அதே இடத்தில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. தரைதளத்தில் ஏற்பட்ட விரிசலானது தொடர்ச்சியாக சுவற்றில் பரவி மேற்கூரை வரை செல்கிறது. இதன் மூலம் இந்த அடுக்குமாடி குடியிருப்பின் கட்டுமானம் தரமற்ற முறையில் கட்டப்பட்டதற்கான முகாந்திரம் உள்ளது.

17) மேற்படி முதல் நிலை விசாரணையில் பெறப்பட்ட வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்களின் படி குற்ற அலுவலர்கள்-1 முதல் 5 நபர்கள் குற்றம் சாட்டப்பட்ட 6வது தனி நபர் திரு.சரண் என்பவருடன் கூட்டு சேர்ந்து கூட்டுசதி செய்து தங்களது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்து, பொது ஊழியர் என்ற முறையில் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் காஞ்சிபுரம் கீழ்கதிர்பூரில் பொருளாதார நிலையில் நலிவடைந்தோருக்கான அடுக்குமாடி குடியிருப்பு 2112 வீடுகள் G+3 கட்டுவதற்கான திட்டத்தில், அரசு ஒதுக்கியுள்ள நிதியினை, நம்பிக்கை மோசடி செய்ததன் மூலம் பொய்யான ஆவணங்களை கணக்கு வழக்குகளை உருவாக்கி அவற்றை உண்மையானதாக பயன்படுத்தி அரசாங்கத்தை ஏமாற்றி குற்றமுறு நடத்தையில் ஈடுபட்டு அரசுக்கும் வாரியத்திற்கும் கோடிகணக்கில் பெரும் பண இழப்பு ஏற்படுத்தி தனி நபர் / ஒப்பந்ததாரர் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் 6க்கும் மற்றும் அவரது நிறுவனத்திற்கும் பெருத்த ஆதாயம் ஏற்படுத்தி இருப்பதில், மேற்படி குற்ற அலுவலர்கள் 1 முதல் 5 மற்றும் தனி நபர் மீது குற்ற நடவடிக்கை எடுக்க போதுமான முகாந்திரம் உள்ளது.

மேலும் கள ஆய்வு செய்வதன் மூலமும் மேற்படி குற்றச்சாட்டுகளின் மூலம் ஏற்பட்ட பண இழப்பு மதிப்பை துல்லியமாக கண்டறிய இயலும் என்பதால் மேற்படி

குற்ற அலுவலர்கள் மீது குற்ற நடவடிக்கை தொடர வேண்டிய அவசியமாகவும், நியாயமாகவும் உள்ளது. எனவே மேற்படி குற்ற அலுவலர்கள் / தனி நபர் 1 முதல் 6 வரையிலான நபர்கள் மீது சட்ட பிரிவுகள் 120B, 409, 167, 468, 471, 477A IPC மற்றும் 13(2) r/w 13(1)(c) & (d) of Prevention of Corruption Act 1988 r/w 109 IPC ன் படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இந்த வழக்கில் அசல் முதல் தகவல் அறிக்கை, இயக்குநரக நமூனா PE 201/2018/TNSCB/CSU-III நாள் 31.03.2023 மற்றும் தமிழ்நாடு விழிப்பு ஆணையர் அவர்களின் உத்திரவு Letter No.3669/VC-II/2019-1 நாள் 18.07.2019 ஆகியவற்றின் நகல்களை கணம் தலைமை குற்றவியல் நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, செங்கல்பட்டு அவர்களுக்கு அனுப்பியும், பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும் விசாரணை நகலை, திரு.T.கந்தசாமி, காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகர பிரிவு-5, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கிறேன்.

C. Umadevi 09/05/2023.
(C. UMADEVI).
Inspector of Police
No.293, M.K.N.Road,
Alandur, Chennai-600 016
City Special Unit III